# டி.வி.எஸ். மோட்டார் கம்பெனி லிமிடெட் TVS

பதிவு அலுவலகம் : "ஜெயலெக்ஷ்மி எஸ்டேட்ஸ்", எண்.29, ஹாடோஸ் சாலை, சென்னை 600 006.
தொலைபேசி : 044 - 28272233, தொலைநகல் : 044 - 28257121 இணையதளம் : www.tvsmotor.com மின்னஞ்சல் : contactus@tvsmotor.com
CIN : L35921TN1992PLC022845

## 26வது ஆண்டு பொதுக்கூட்டம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பற்றிய அறிவிப்பு

நிறுவனத்தின் பங்குதாரர்களின் இருபத்தி ஆறாவது ஆண்டு பொதுக்கூட்டம் செவ்வாய்க்கிழமை, **7-ஆம் தேதி, ஆகஸ்ட் 2018, அன்று காலை 10.35 மணிக்கு மியூசிக் அகாடெமி, புது எண் 168, (பழைய எண் 306), டி.டி.கே.சாலை, இராயப்பேட்டை, சென்னை 600 014**, என்ற முகவரியில் மே 16, 2018 தேதியிட்ட ஆண்டு பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பில் உள்ள தீர்மானங்களை நிறைவேற்ற நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

ஆண்டு பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு, வருடாந்திர அறிக்கை, வருகை பதிவு குறிப்பேடு மற்றும் பதிலி படிவங்கள் ஆகியவை கம்பெனி மற்றும் டெபாசிட்டரியில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அங்கத்தினர்களுக்கு மின்வடிவில் (காகித வடிவில் கோரிய அங்கத்தினர்கள் தவிர) அனுப்பப்பட்டுள்ளன. கம்பெனி மற்றும் டெபாசிட்டரியில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத அங்கத்தினர்களுக்கு இவை காகித வடிவில் அனுப்பப்பட்டுள்ளன. அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை ஜூலை 13, 2018 அன்று கம்பெனியால் அனுப்பி முடிக்கப்பட்டது.

ஆண்டு பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.tvsmotor.com மற்றும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் (NSDL) இணையதளம் www.evoting.nsdl.com ஆகியவற்றில் கிடைக்கும். வருடாந்திர அறிக்கை கிடைக்கப்பெறாத அங்கத்தினர்கள் கம்பெனியின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது நிறுவனத்தின் கம்பெனி செயலாளருக்கு மேலே கூறப்பட்ட மின்னஞ்சல் முகவரியில் அல்லது கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு தங்கள் கோரிக்கையை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். வரையறுக்கப்பட்ட நாளன்று (ஜூலை 31, 2018) காகித வடிவில் அல்லது மின் வடிவில் பங்கு வைத்திருக்கும் அங்கத்தினர்களுக்கு 26வது ஆண்டு பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவேண்டிய தீர்மானங்கள் மீதான தங்கள் வாக்குகளை ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தை தவிர தொலைவில் இருந்து மின்னஞ்சல் முறையில் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் நிறுவனம் மூலம் பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது. அனைத்து அங்கத்தினர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால்;

1. ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய சாதாரண மற்றும் சிறப்புத் வர்த்தகங்கள் மின்னணு வாக்குப்பதிவு மூலம் செயலாக்கப்படலாம்.
2. மின்னணு மூலம் வாக்குப்பதிவு ஆரம்பிக்கும் நாள் மற்றும் நேரம்: சனிக்கிழமை, ஆகஸ்ட் 4, 2018 காலை 9 மணி.
3. மின்னணு மூலம் வாக்குப்பதிவு முடிவடையும் நாள் மற்றும் நேரம்: திங்கட்கிழமை, ஆகஸ்ட் 6, 2018 மாலை 5 மணி.
4. மின்னணு மூலம் வாக்குப்பதிவு திங்கட்கிழமை, ஆகஸ்ட் 6, 2018 மாலை 5 மணிக்கு மேல் அனுமதிக்கப்பட மாட்டாது.
5. மேலே குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குப்பின் தொலைவில் இருந்து வாக்களிக்கும் இயந்திரம் செயலிழக்கச் செய்யப்படும். அங்கத்தினர்கள் தீர்மானத்தின் மீது ஒருமுறை வாக்களித்தப்பின் பின்னர் அதை மாற்ற முடியாது.
6. மின்னணு மூலமாக அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில், வாக்குச்சீட்டு மூலமாக வாக்களிக்கும் வாக்காளர் பட்டியல் ஜூலை 31, 2018 அன்று வரையறுக்கப்பட்டது.
7. எந்த ஒரு நபரும் அறிவிப்பு அனுப்பப்பட்டபின் ஆனால் கடைசி நாளான ஜூலை 31, 2018 தேதிக்கு முன் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினரானால், **evoting@nsdl.co.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது திரு.K.ராமன், உதவி பொது மேலாளர்-பங்குகள், சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட், முதல் மாடி, "ஜெயலெக்ஷ்மி எஸ்டேட்ஸ்", எண்.29, ஹாடோஸ் சாலை, சென்னை - 600 006, மின்னஞ்சல் **raman@scl.co.in**-ல் விண்ணப்பம் செய்து உள்நுழைய அடையாள சொல் (login ID) மற்றும் கடவுச்சொல் (Password) ஆகியவற்றை கேட்டுப் பெறலாம். இருப்பினும் அவர்கள் NSDLல் தொலைவில் இருந்து வாக்களிக்க ஏற்கனவே பதிவு செய்து இருந்தால், அவர்கள் தங்கள் தற்போதைய அடையாள சொல் மற்றும் கடவுச்சொல்லை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.
8. தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களிக்க இயலாத அங்கத்தினர்கள் காகித வாக்குப்படிவின் மூலம் வாக்களிக்க ஆண்டு பொதுக்கூட்டத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
9. தொலைவில் இருந்து மின்னணு முறையில் வாக்களித்த அங்கத்தினர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வாக்களிக்க முடியாது.
10. வரையறுக்கப்பட்ட நாளான ஜூலை 31, 2018 அன்று உறுப்பினர் பதிவேடு அல்லது பயனாளிகள் பதிவேட்டில் உள்ள அங்கத்தினர்கள் மட்டுமே தொலைவில் இருந்து மின்னணு முறையில் அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தில் காகித வடிவில் வாக்களிக்க முடியும்.
11. திரு.K.ஸ்ரீராம், தொழில் முறை கம்பெனி செயலாளர் அவர்களை மின்னணு வாக்குப்பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குப்பதிவு ஆகியவை நேர்மையான மற்றும் ஒளிவுமறைவு இல்லாத முறையில் நடைபெற ஆய்வாளராக கம்பெனியால் நியமிக்கப்பட்டுள்ளார்.
12. வாக்களிக்கும் முறையில் ஏதேனும் சந்தேகமிருந்தால், உறுப்பினர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதி அல்லது தொலைவில் இருந்து வாக்களிக்கும் முறை பற்றிய சிறு குறிப்பேடு ஆகிய பகுதிகளை www.evoting.nsdl.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம் அல்லது இலவச தொலைபேசி எண் : 1800-222-990 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். மின் வாக்குப்பதிவு மீது சந்தேகம் மற்றும் குறைகள் இருந்தால் அவற்றை திரு.நிதின் அம்புரே, துணை தலைவர், நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட், டிரேட் வோல்டு – ஏ விங், கமலா மில்ஸ் காம்பவுண்டு, லோயர் பாரேல், மும்பை – 400 013, மின்னஞ்சல் : nitina@nsdl.co.in தொலைபேசி எண் (022) 2499 4587 அல்லது திரு.K.ராமன், உதவி பொது மேலாளர் – பங்குகள், சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட், பங்கு மாற்று பிரதிநிதி, மின்னஞ்சல் : raman@scl.co.in அவர்களிடம் மேற்குறிப்பிட்ட முகவரியில் இருந்து தெரிந்து கொள்ளவும்.
13. சரியான நேரத்தில் தகவல்களை பெற உங்கள் மின்னஞ்சல் முகவரியை கம்பெனி மற்றும் உங்கள் டெபாசிட்டரி பார்ட்டிசிபெண்டுகளுடன் பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர் குழு ஆணையின்படி
K.S. ஸ்ரீநிவாஸன்
கம்பெனி செயலாளர்

சென்னை
ஜூலை 13, 2018